வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 29.01.2025 புதன்கிழமை இதழ் : 29 பக்கங்கள் : 12

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# வடக்கு மக்கள் அநுர அரசிடம் தமக்கான நீதியைப் பெறலாம்!

## நியூஸிலாந்து தூதுவர் டேவிட் பின்னியிடம் நம்பிக்கை வெளியிட்டார் மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜன. 29

**ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் பாரபட்சமாக நடத்தாது என்றும், இந்த அரசாங்கத்தின் காலத்தில் தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளலாம் என வடக்கு மக்கள் நம்புகின்றனர் எனவும் நியூஸிலாந்து தூதுவர் டேவிட் பின்னியிடம் தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகன்.**



வடக்கு மாகாண ஆளுநருக்கும், நியூஸிலாந்துத் தூதுவர் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், பொருளாதார மேம்பாடு தொடர்பிலும் குறிப்பாக சுற்றுலாத்துறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் பாரபட்சமாக நடத்தாது என்றும், இந்த அரசாங்கத்தின் காலத்தில் தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் வடக்கு மக்கள் நம்புகின்றனர் எனவும் நியூஸிலாந்துத் தூதுவர் டேவிட்

11

## யாழ்.பல்கலைக்கழக பிரச்னைக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்!

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜன. 29

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவித செயற்பாடுகளுக்கும் இடமளிக்கப்போவதில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்

11

## இலங்கை கடற்படை சுட்டத்தில் இரண்டு இந்திய மீனவர் காயம்!

பருத்தித்துறை கடற்பரப்பில் 13 பேர் கைது இந்தியத் துணைத் தூதுவர் நேரில் பார்வை

யாழ்ப்பாணம், ஜன, 29

பருத்தித்துறைக் கடற்பரப்பில், இலங்கை கடற்படையின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இந்திய மீனவர்களை, யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி பார்வையிட்டுள்ளார்.

பருத்தித்துறைக் கடற்பரப்பில், அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 13 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கடற்படையினரால்

11

## ஜனாதிபதி அநுர யாழ். வரும் நேரத்தில் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 29

ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் கி.டனிசன் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைக்கு சரியான வகையில் இது வரை எந்தவொரு தரப்பினரும் தீர்வை தரவில்லை.

வடக்கின் ஆளுநரிடமும் பல

11

## புதிய அரசமைப்பை ஆதரித்தால் தமிழருக்கு எதிர்காலம் இல்லை!

எச்சரிக்கின்றார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம்,ஜன.29



ஒற்றையாட்சி சித்தாந்தம் கொண்ட புதிய அரசமைப்பை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது. இது பாராளுமன்றில் நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது. இது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் பலம் தமிழர்

11

## மாவை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்!



யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெரும் தலைவரும் அரசியல் மூத்த தலைவருமான மாவை சேனாதிராசா யாழ்.போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கை சுவாச உதவியுடன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று காலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

11

## மாவை குணமடைய நாமல் பிரார்த்தனை

கொழும்பு, ஜன. 29

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை அறிந்து மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் அவர் விரைவாகவும் முழுமையாகவும் குணமடைய

11

## புதிய அரசமைப்பைத் தமிழர் ஆதரித்தால் அரசியலில் இருந்து நான் விலகிவிடுவேன்!

கஜேந்திரகுமார் எம்.பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன29

ஒற்றையாட்சி சித்தாந்தம் கொண்ட புதிய அரசமைப்பைத் தமிழ் மக்கள் ஆதரிக்கக்கூடாது. அவ்வாறு ஆதரித்தால் அரசியலிலிருந்து விலகிவிடுவேன். இவ்வாறு கூறியுள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி.

புதிய அரசமைப்பு தொடர்பாக நேற்றைய தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்து

11

## இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னை தீர்க்க பேச்சு தொடரும்!

கொழும்பு, ஜன. 29

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னையை தீர்க்கும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னை தொடர்பாக நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

11

## யோஷிதவுக்கு பிணை வழங்கப்படுவதால் அவர் வழக்கிலிருந்து விடுதலை என்பதல்ல!

நீதி அமைச்சர் ஹர்ஷன விளக்கம்

கொழும்பு, ஜன. 29

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷவுக்கு பிணை வழங்கப்படுவதால் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்று அர்த்தப்படுத்த முடியாது" என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

யோஷித ராஜபக்ஷவுக்கு பிணை வழங்கப்பட்டமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

11

## உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் மாதம் நடக்கும்!

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 29


2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ உறுதிப்படுத்தினார்.

நேற்று நடைபெற்ற

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# சர்ச்சையில் சிக்கிய ரணில் கையொப்பம் இட்ட கடிதம்!

## சி.ஐ.டி. தீவிர விசாரணை

கொழும்பு, ஜன. 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்தபோது, அவரது கடிதத் தலைப்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு விடுக்கப்பட்டிருந்த முறைகேடான உத்தரவு குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில், ஜனாதிபதிக்கான கடிதத் தலைப்பில் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு விடுக்கப்படும் விசேட உத்தரவு என்ற தலைப்பில் ஒரு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் தென் மாகாணத்தில் மோசடி செயற்பாடுகளை மேற்கொள்ளும் வர்த்தகர் ஒருவருக்கு அவரது மோசடி நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல இடையூறு விளைவிக்க வேண்டாம் என்ற வாறான முறைகேடான உத்தர வொன்று பிறப்பிக்கப்பட்டுள் ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அனுப்பப்பட்டதாக குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், அது மாத்தறை தபால் அலுவலகத்தில் இருந்து தபால் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த கடிதம் போலியானதாக இருக்கலாம் என்ற ஊகத்தில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்ரமரத்ன, அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருந்தார்.

அதன் பிரகாரம் தற்போதைக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஜெனரல் சரத் பொன்சேகா மீதான தாக்குதல் வழக்கு விசாரணைக்கு!

கொழும்பு, ஜன. 29

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மீது தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்திய குண்டுதாரி துர்க்காவுக்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்ட மூன்று விடுதலைப் புலி சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் 230 குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் இந்த விசாரணைகள் இடம்பெற்றன.

இதன்போது, முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

பின்னர் வழக்கு மேலதிக விசாரணைக்காக இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

பிரதிவாதிகளான மோரிஸ் எனப்படும் செல்வராசா கிருபாகரன், சண்முகலிங்கம் சூரியகுமார் மற்றும் தம்பையா பிரகாஷ் எனப்படும் தனுஷ் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு, கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மீது தற் கொலை குண்டுதாரி தாக்குதல் நடத்தி அவருக்கு பலத்த காயங்களை ஏற்படுத்தியது மற்றும் அவரது மெய்க்காப் பாளர்கள் மூவரைக் கொல்ல உதவியமை உள்ளிட்ட குற்றச் சாட்டுகளின் பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் இந்த வழக் கைத் தாக்கல் செய்துள்ளார். (அ)

# கட்டைக்காட்டில் ஆண்டவர் சிலுவையின் காலிலிருந்து நீர்!



யாழ்ப்பாணம், ஜன. 29

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் காணப்படும் ஆண்டவரின் சிலுவையில் இருந்து நேற்று நீர் கசிந்துள்ளது


மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக ஆண்டவர் சிலுவையின் விரல் பகுதியில் இருந்து நீர் கசிந்தது.

சம்பவம் அறிந்து பல்வேறு இடங்களில் இருந்து வருகை தந்த மக்கள் ஆண்டவரின் காலில் இருந்து வடிந்தோடிய நீரை எடுத்துச் சென்றனர்.

சகோதர மதத்தினர் மற்றும் இராணுவத்தினர், பொலிஸார், பொது மக்கள் என பலர் இந்த காட்சியை பார்வையிட்டுடன் புகைப்படங்களையும் எடுத்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக ஆலய பங்குத்தந்தையால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மேலதிக தகவல்களை வெளியிட முடியுமென கப்பலேந்தி மாதா ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (அ-05)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவரின் குறும்படம் வெளியீடு






யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள், கல்லூரி ஒளிப்படக் கலைக் கழகத்தினரின் இயக்கம் மற்றும் படப்பிடிப்பில் உருவான 'THE WAY - Target Locked' என்ற குறும்படம் அண்மையில் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் இ.செந்தில்மாறன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைபீடத் தலைவருமான பேராசிரியர் பா.அகிலனும் சிறப்பு விருந்தினர்களாக ஈழத்து திரைப்பட இயக்குநர் ராஜ் சிவராஜ், காணொளி புகைப்படக் கலைஞர் ஏ.கே.கமல், இசையமைப்பாளர் பூ.மதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சமூக பொறுப்புணர்வுச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக - தற்கொலைகளைத் தடுக்கும் உளவளத்துணைக்கு உதவுமுகமாக மாணவர்களை நல்வழிப் படுத்தும் இந்த குறும்படத்தை முற்றுமுழுதாக யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் உருவாக்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## பரந்தனில் 27 கிலோ மாட்டிறைச்சி அழிப்பு

கிளிநொச்சி, ஜன. 29

கிளிநொச்சி பரந்தன் சந்தி பகுதி உணவகம் ஒன்றில் கைப் பற்றப்பட்ட, அனுமதி பெறப் படாது வெட்டப்பட்ட 27 கிலோ கிராம் மாட்டு இறைச்சி, திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது, பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டது.

அத்துடன் கடமை உரிமையாளர் கடுமையாக எச்சரிக்கப் பட்டார்.

கண்டவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை சேர்ந்த, மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் பரந்தன் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதரால், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அ)

# அதானியிடமிருந்து இலங்கைக்கு குறைந்த விலையில் மின்சாரம்?

கொழும்பு, ஜன. 29

அதானி புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தின் கீழ் மின்சார கொள்முதல் விலையை 6 சத டொலருக்கும் குறைவாகக் குறைப்பது குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங் களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கடந்த வாரம், இலங்கை அரசாங்கம் அதானி புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்ததாக சில ஊடக அறிக்கைகள் வெளிவந்தன. ஆனால் பின்னர் இலங்கை அரசாங்கமும் அதானியும் அந்த ஊடக அறிக்கைகளை மறுத்தன.

இந்நிலையில், இந்த திட்டம் ரத்து செய்யப்படாது என்று அமைச்சரவை பேச்சாளர் இன்று அறிவித்தார்.

அதானி குழுமத்தின் எரிசக்திப் பிரிவான அதானி கிரீன் எனர்ஜி, இலங்கையின் மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் இரண்டு காற்றாலை மின் ஆலைகளை நிர்மாணிப்பதற்கு இலங்கையுடன் ஒப்பந்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது.

அதானி நிறுவனம் ஒரு அலகு மின்சாரத்திற்கு 8.25 அமெரிக்க சத டொலர் விலை கேட்டுள்ளதாகவும், போட்டி ஏலம் இல்லாமல் இந்த திட்டங்களை அதிக அலகு விலைக்கு வழங்கியது குறித்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய பின்னணியில், இந்தத் திட்டங்களின் தொடக்கம் தற்போது நிறுத்தப்பட்டுள்ள நிலையில், விலையைக் குறைக்க முடியும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.01.2025 புதன்கிழமை
பிலவ வருடம், தை 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணில் பற்றிய கதைகள்

அரசாங்கத்தால் முடியாமல் போகும் போது ரணில் மீண்டும் வருவார் - அவர்தான் நாட்டை கட்டியெழுப்பினார். ஆனால், மக்கள் அவரை வெளியேற்றிவிட்டனர் - என்று ரணிலின் நெருங்கிய சகாக்களில் ஒருவரான வஜிர அபேவர்த்தன குறிப்பிட்டிருக்கின்றார் - ஆனால், கேள்வி - ரணிலிடம் அதிகாரம் கிடைத்தது. ஆனால் அதன் பின்னர் கூட ஏன் அவரால் மக்களை தன் பக்கம் கொண்டுவர முடியாமல் போனது? ரணில் பற்றி முன்னர் ஒரு முறை சமாதான காலத்தில் நோர்வே இராஜதந்திரியும் ரணிலுக்கு நெருக்கமானவருமான எரிக் சொல்ஹெய்ம் கூறியிருந்தார் - ரணில் ஆற்றலுள்ளவர். ஆனால், அவரால் சாதாரண சிங்கள மக்களை வசீகரிக்க முடியவில்லை. சாதாரண மக்கள் மத்தியில் அவருக்கு எப்போதுமே செல்வாக்கு இருந்ததில்லை.

ரணில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்பு 2005இல் மட்டும்தான் கனிந்திருந்தது. அந்த நேரத்தில் தமிழ்மக்களும் அவருக்கு வாக்களிக்கத் காத்திருந்தனர் - புலிகள் அதனை அனுமதித்திருந்தால் ரணில் நிச்சயம் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்திருப்பார் - ஆனால், நிலைமைகள் தலைகீழாகிவிட்டது.

நீண்ட அனுபவமும் சர்வதேச தொடர்புகளும் மிக்க ஒரேயொரு தென்னிலங்கை அரசியல்வாதியாகவும் எவருடனும் (தென்னிலங்கை அரசியலில் இருப்பவர்களில்) ஒப்பிட முடியாதளவுக்கான ஆளுமையைக் கொண்டிருந்த போதிலும் அவரால் மக்களைக் கவர முடியவில்லை. மக்களை கவர முடியாவிட்டால் என்ன அளுமையிருந்தும் தேர்தல் அரசியலில் ஒன்றுமில்லாதவர் போன்றுதான் வெளியேற நேரிடும். ஆற்றலுள்ள பலருக்கு இவ்வாறான அனுபவம் கிடைப்பதுண்டு. அமெரிக்கா போன்ற வளர்சியுற்ற நாட்டிலேயே அடித் தொண்டையில் பேசும் டொனால்ட் ரம்பின் பக்கமாக மக்கள் அலையாக திரளும் போது, இலங்கை போன்ற, வளர்சியடையாத, அதிகம் அரசியல் விழிப்புணர்வை பெற்றிராத மக்கள் பற்றி தடுமாறுவதற்கு ஒன்றுமில்லை.

ரணிலை பலரும் நரி என்று கூறுவதுண்டு. அவரது மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை நரி ஒன்று என்றும், ரணிலை நரி இரண்டு என்றும் பார்ப்பவர்கள் அரசியலில் உண்டு. ஆனால், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிடமிருந்து அரசியல் சாணக்கியத்தை ரணில் உண்மையிலேயே முழுமையாக கற்றுக்கொண்டாரா என்பதும் கேள்விதான். ஏனெனில், ஜே.ஆரை, நரி என்று கூறுமளவுக்கு அரசியலில் அவர் நரியாகவே இருந்தார். தான் விரும்பியவாறு ஓர் அரசியல் யாப்பை கொண்டு வந்து, ஆட்சியில் தான் நினைத்தவற்றை எல்லாம் செய்துவிட்டு, மிகவும் அமைதியாக ஓய்வெடுத்து, வயது முதிர்வால் இறந்து போனார்.

ஆனால் அவருடன் முட்டிக் கொண்டிருந்த, ஜே.ஆர் இணங்கிய இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்ப்பதையே பிரதான அரசியலாகக் கொண்டிருந்த ரணசிங்க பிரேமதாஸவோ, தந்திரங்களை புரியாமல், விடுதலைப் புலிகளுடன் பின்கதவு உடன்பாட்டுக்குச் சென்று, இறுதியில் அவர்களால் கொல்லப்பட்டார்.

இந்திய அமைதிப் படைகளை விடுதலைப் புலிகளை பயன்படுத்தி வெளியேற்றியதன் ஊடாக, சிங்கள அரசியல் சமூகத்திற்கு பிரேமதாஸ வரலாற்று நன்மையை செய்திருக்கின்றார்தான், ஆனால், அவ்வாறு நன்மையை செய்தவர் அரசியலில் தொடரமுடியாமல் போனதில்தான் பிரேமதாச தோல்வியுற்றார். ஆனால் ஜே.ஆரோ அனைத்தையும் செய்துவிட்டு, எதுவுமே நடக்காதவர் போன்று அமைதியாக முதுமையை அனுபவித்து மறைந்தார். இந்த இடத்தில்தான் ஜே.ஆர் அரசியலில் ஒரு நரியாக இருந்திருக்கின்றார் ஆனால் ரணிலோ கோட்டாபயவின் வீழ்ச்சியை தொடர்ந்து ஒரு வரலாற்று வாய்ப்புக் கிடைத்த போதிலும் கூட, அதனை அரசியல் முதலீடாகக் கொண்டு நகர்வதில் வெற்றிபெற முடிய வில்லை. காலாவதியாகிப் போன தமிழ் கட்சிகளுடன் நேரத்தை செல விட்டுக் கொண்டிருந்தார் ஆனால் தென்னிலங்கையோ அவருக்கு முற்றிலுமாக வெளியில் இருந்தது. அரசாங்கம் வீழ்ச்சியுற்றால் ரணில் போன்ற வர் தேவைப்படலாம்தான் ஆனால் அப்போதும் கூட, அடுத்த தேர்தலில் தோற்றுப் போகும் ஒருவராக அவர் இருக்கமாட்டாரா என்பதுதான் கேள்வி.

## யாழில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரணம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஜன.29

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரணம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவகத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி. சகாதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பனை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த அன்ரனி ராஜ் மற்றும் பொறியியலாளர் டிரோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலம்பெயர் தமிழர்களின் நிதிப் பங்களிப்பில் இந்த உபகரணம் தயாரிக்கப்பட்டு பனை ஆராய்ச்சி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.



(எ)

## அந்தணர்கள் - ஆலய நிர்வாகத்தினர் முரண்பாடுகள் வேதனையளிக்கிறது

### ஆளுநர் வேதநாயகன் வேதனை

யாழ்ப்பாணம், ஜன.29

ஆலயங்களின் நிர்வாகங்கள் மற்றும் அந்தணர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றமை வேதனையளிப்பதாக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்து சமய பேரவை மண்டபத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற சிவாக்ஷர கௌசிக குருகுலத்தின் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆலயங்களின் நிர்வாகங்கள் மற்றும் அந்தணர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் மற்றும் நிர்வாகத்தினருக்கு இடையிலான முரண்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றமையால் அவர்கள் அதிகளவு பணத்தை வீணாகச் செலவு செய்கின்றனர்.

ஆலயங்கள் சமூகங்களை வழிப்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட ஆலயங்கள் வழக்குகளுக்காக நீதிமன்றங்களை நாடும் நிலைமை ஏற்பட்டது துன்பகரமானது"- என்றார்.

(எ)

## 'முன்பள்ளிச் செல்நெறிகள்' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஜன.29

இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் '21ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்' என்ற நூல் அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ். உசன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

உசன் இராமநாதன் முன்பள்ளியின் ஆண்டு விழா மற்றும் கால்கோள் நிகழ்வில் இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளரும் - நூலின் பதிப்பாசிரியருமான ந. சச்சிதானந்தன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த நிலையிலேயே அவர் மேற்படி நூலை முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத்தலைவர் இ. சுரேனிடம் வழங்கி அறிமுகம் செய்து வைத்திருந்தார்.


அத்துடன் இதன்போது சபையில் இருந்த அனைவருக்கும் இலவசமாக பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்த நூலானது தேசிய மட்டத்திலான முன்பிள்ளைப் பருவ கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறை, பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு, வடமாகாண முன்பள்ளித் துறையின் இன்றைய நிலை உள்ளிட்ட பல ஆக்கங்களை உள்ளடக்கியுள்ளது.



(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஜனவரி - 29 புதன்கிழமை
குரோதி வருடம் - தை 16
நல்ல நேரம்:9.00-10.30
ராகு காலம்:12.00- 1.30
திதி :அமாவாசை




**மேடம்**
பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். உடல் நலம் சீராகும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன் படுத்துவது நல்லது. விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் பயனடைவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சாதிக்கும் நாள்.

**கடகம்**
உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். பணவரவு திருப்தி தரும்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்டநாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். யாரையும் நம்பி ஏமாற வேண்டாம்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில் புதுஅனுபவம் உண்டாகும். புதுவேலைக் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சொத்துபிரச்னை ஒன்று தீரும்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டு. திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**தனுசு**
கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சி வசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். இங்கிதம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வாகனத்தில் கவனம் தேவை.

**கும்பம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற் றுவீர்கள். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலரின் உதவியை நாடுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை எமது அரசாங்கம் நிச்சயம் நிறைவேற்றும்

## ஜெகதீஸ்வரன் எம். பி. உறுதி

வவுனியா, ஜன.29

எமது அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,"நாம் பாராளுமன்றம் செல்கின்ற நாட்கள் மற்றும் ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களிலே ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்தில் எங்களது பிரசன்னம் இருக்கும். இந்த நாட்களிலே மக்கள் தங்களுடைய பிரச்னைகளை இங்கு வந்து எம்மிடம் தெரிவித்துக் கொள்ள முடியும்.

பொதுவாகவே அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற கருத்து மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. என்றாலும் கூட எமது இந்த ஐந்து வருட ஆட்சிக்காலத்தினுள் எங்களால் தெரிவிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் முழுமையாக நிவர்த்தி செய்யப்படும்.

குறிப்பாக நாம் ஆட்சியமைத்து மூன்று மாத காலப்பகுதிக்குள் நாம் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் படிப்படியாக பல்வேறுபட்ட விடயங்களை தீர்த்து வைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

மேலும், எமது அரசின் மீது தேங்காய் விலை மற்றும் அரிசி விலை அதிகரித்துள்ளதாக ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது.

நாம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களே ஆகின்ற நிலையில் அரிசி விலை தொடர்பாக எம்மிடம் கேட்கப்படுகின்றது.

கடந்த காலத் தில் இருந்த அரசாங்கங்கள் நெல்லை சேமித்து வைத்து உரிய பொறிமுறையின் கீழ் மக்களுக்கு அரிசியை விநி யோகிப்பதற்கான செயன் முறையை மேற்கொண்டிருந்தால் இவ்வகையான தட்டுப் பாடுகளும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டிருக்காது"- என்றார். (எ-10)

# யாழில் எம். ஜி. ஆர். பிறந்தநாள் நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், ஜன.29

தமிழக முன்னாள் முதலமைச்சரும் புரட்சித் தலைவருமான எம். ஜி. இராமச்சந்திரனின் 108ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று முன்தினம் பண்டத்தரிப்பு - சாந்தை விநாயகர் கலையரங்கில் நடைபெற்றது. அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவை மற்றும் எம். ஜி. ஆர். முன்னேற்றக்கழகம் என்பன இணைந்து இந்த பிறந்தநாள் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது, புற்றுநோய், சிறுநீரக நோய், பார்வை குறைபாடு போன்றனவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கல், விளையாட்டில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், சிறுவர்கள் - முதியோர்களுக்கு உதவிகள் வழங்கல் மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு என்பன நடைபெற்றன. (எ-05)

# ஒரு கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் பகுதியில் ஒரு கிலோ 100 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 52 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணை களை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ- 05)

# வடமராட்சியில் பாடசாலை மாணவர்கள் போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி



யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களால் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன்தினம் காலை முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமான குறித்த விழிப்புணர்வு பேரணி அம்பன் கிழக்கு வரை சென்று நிறைவடைந்தது.

பாடசாலை அதிபர் கண்ணதாசன் தலைமையில் ஆரம்பமான குறித்த பேரணியில் "ஒழிப்போம் ஒழிப்போம் மதுவை ஒழிப்போம், தவிர்ப்போம் தவிர்ப்போம் வெற்றிலை பாக்கை தவிர்ப்போம், காப்போம் காப்போம் சமூகத்தை காப்போம்" போன்ற பல்வேறு கோஷங்களை மாணவர்கள் எழுப்பினர். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யப் படைகளில் உள்ள இளைஞர்களை மீட்க விரைந்து இராஜதந்திர நடவடிக்கை!

**பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரவிடம் ரஷ்ய தூதுவர் லெவன் ஜகார்யன்தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 29

**பயண முகவர்கள் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு முயன்று ரஷ்ய படையில் வலிந்து இணைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் உள்ளிட்டவர்களை மீட்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் விரைந்து முன்னெடுக்கப்படுவதற்கு இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ் ஜகார்யன் வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவிடம் இணக்கம் வெளியிட்டுள்ளார்.**

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ் ஜகார்யனுக்கும், பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவுக்கும் இடையிலான உத்தியோக பூர்வமான சந்திப்பொன்று கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சின் பிரதியமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, ரஷ்யாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுவாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் ஆழமாக கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், பொருளாதார மீள் எழுச்சிச் செயற்பாட்டில் ரஷ்யா வழங்கி வரும் ஒத்துழைப்புக்களுக்கு பிரதயமைச்சர் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எதிர்காலத்தில் சுற்றுலாத் துறை, மற்றும் வர்த்தகத்துறையில் ரஷ்யாவின் வகிபாகம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதோடு அதற்கான விசேட கலந்துரையாடல்களை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இலங்கையர்கள் ரஷ்ய படைகளில் இணைந்துள்ளமை தொடர்பாகவும் அதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பதென இணக்கம் காணப்பட்டுள்ளது.

குறிப்பாக சுயவிருப்பின் பேரில் ரஷ்ய படைகளில் இணைந்தவர்களின் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லையெனச் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் மற்றும் நட்டஈடுகள் சம்பந்தமான கோரிக்கைகள் தொடர்பில் தூதுவரின் கவனத்துக்கு பிரதியமைச்சர் எடுத்துச் சென்றார்.

தொடர்ந்து வடக்கில் இருந்து முகர்வகள் மூலமாக ஐரோப்பாவுக்குச் செல்வதற்காக பயணமாகி ரஷ்யாவில் வைத்து வலிந்து படைகளில் இணைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போது, ரஷ்யத் தூதுவர் விரைந்து குறித்த விடயம் சம்பந்தமாக இராஜதந்திர மட்டத்திலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதெனவும், அவர்களின் உயிர்ப்பாதுகாப்பு தொடர்பில் கரிசனைகளை கொள்வதாகவும் குறிப்பிட் டார். (அ)

# ரணிலை நாடும் மக்கள் வெகுவிரைவில் மாற்றம்!

கொழும்பு, ஜன. 29

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு அதிருப்தியடைந்துள்ள மக்கள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாடுகிறார்கள் எனவும் வெகுவிரைவில் மாற்றம் ஏற்படும் என்றும் முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை வீட்டெடுத்தோம் என்று பெருமிதம் கொள்ளும் தார்மீக உரிமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கிடையாது.

பொருளாதார மீட்சிக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த திட்டங்களை தவிர்த்து புதிய திட்டங்கள் எதனையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளதா?

பல பொய்களை குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக நாட்டு மக்களுக்கு குறிப்பிட்டு குறுகிய அரசியல் வெற்றிக்காக தான் பொய்யுரைத்ததை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை எவ்வித மாற்றமுமில்லாமல் முன்னெடுப்பதாக குறிப்பிடும் ஜனாதிபதி கடந்த காலங்களில் நாணய நிதியத்தின் செயற்திட்டத்துக்கு முழுமையாக எதிர்ப்பு தெரிவித்தார்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் குறிப்பிடும் காரணிகள் மூர்க்கத்தனமானவை.

வீட்டில் தேங்காய் சம்பல் செய்வதாலும், உணவுக்கு தேங்காய் பயன்படுத்துவதாலும் தேங்காய்க்கு தட்டுப்பாடு என்று பிரதி அமைச்சர் குறிப்பிடுகிறார்.

காட்டு விலங்குகளினால் விவசாய பயிர்கள் நாசமடைகிறது.

அதனால் அரிசி உள்ளிட்ட உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் குறிப்பிடுகிறார்.

கடந்த காலங்களில் வீடுகளில் தேங்காய் உணவுக்கு பயன்படுத்தவில்லையா, காட்டு விலங்குகள் வாழவில்லையா? -என்றார். (அ)

# இரவுநேர சோதனைகளை நடத்தும் நுகர்வோர் விவகார அதிகார சபை!

கொழும்பு, ஜன. 29

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கைது செய்வதற்காக இரவு நேரச் சோதனைகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் மாலை 5 மணிக்குப் பிறகு சோதனைகளுக்கு வருவதில்லை என்பதால், மோசடி வியாபாரிகள் மாலை 5 மணிக்குப் பிறகுதான் அரிசியை விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

விவசாயிகள் மற்றும் நுகர்வோரைப் பாதுகாக்க சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சோதனைகள் தீவிரப்படுத்தப்படும் என்றும், கட்டுப்பாட்டு விலையை விட அதிகமாக அரிசி விற்பனை செய்ய அனுமதிக்கப்படாது என்றும், அரிசியின் கட்டுப்பாட்டு விலை எந்த வகையிலும் அதிகரிக்கப்படாது என்றும் தெரிவித்தார். (அ)

# நாட்டுக்குள் போதைப்பொருள் வருவதை விசேட அதிரடிப் படையினர் களமிறக்கம்!

**அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவிப்பு**



கொழும்பு, ஜன. 29

வான் மற்றும் கடல் வழியாக நாட்டுக்குள் போதைப் பொருள் வருவதைத் தடுக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள் போதைப்பொருள் நுழைவதை உடனடியாகத் தடுப்பது கடினம் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், போதைப் பொருள் நுழைவதை தடுக்க நாங்கள் திட்டங்களை வகுத்துள்ளோம். விசேட அதிரடிப் படையினர் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றனர்.

இப்போதும் கூட கோடிக் கணக்கான மதிப்புள்ள போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

கடந்த சில மாதங்களில் ஏராளமான சட்டவிரோத போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக்குள் போதைப் பொருள் வருவதை உடனடியாக நிறுத்துவது கடினம். தற்போது போதைப்பொருள் கடத்தல் சமீபத்தில் நாட்டில் மிகவும் வலுவாக பரவியுள்ளது.

இது தொடர்பாக நாங்கள் எங்கள் கொள்கைகளை செயல்படுத்துகிறோம்-என்றார். (அ)

# சிறுவர்கள் துஷ்பிரயோகம் குறித்து கடந்த ஆண்டு 321 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜன. 29

2024 ஆம் ஆண்டில் சிறுவர்கள் மீதான கடுமையான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பாக 321 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கூற்றுப்படி, 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் 580 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த காலப்பகுதியில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு சிறுவர்கள் தொடர்பான 8,746 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளில் அதிகபட்சமாக 2,746 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,950 முறைப்பாடுகளும், சிறுவர்களை யாசகர்களாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக 229 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன.

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 42 முறைப்பாடுகளும், பாலியல் செயல்களுக்கு குழந்தைகளை பரிந்துரைப்பது தொடர்பாக 25 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடத்தில் சிறுவர் திருமணங்கள் தொடர்பாக 14 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன், நிர்வாணப் புகைப்படங்களை இணையத்தில் வெளியிடுவதாக அச்சுறுத்தப்பட்டதாக 151 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

2024 ஆம் ஆண்டு தற்கொலை முயற்சிகள் தொடர்பான 18 முறைப்பாடுகளும், போதைப் பொருள் பாவனை தொடர்பான 120 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது என மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# அரசியல் அழுத்தங்களின்றி விசாரணைகள் நடக்கின்றன

கொழும்பு, ஜன. 29

கடந்த சில வருடங்களாக மந்தகதியில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டத்துக்கு ஏற்ப விசாரணைகள் இடம் பெறுகின்றன. எதிர்காலத்தில் சில கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அண்மைய நாட்களாக இடம்பெற்ற சில கைது நடவடிக்கைகள் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-கடந்த சில வருடங்களாக மந்தகதியில் இடம்பெற்ற விசாரணைகளை தற்போது எந்தவித அரசியல் அழுத்தமும் இன்றி விரைவாக விசாரணைகளை முன்னெடுத் துள்ளோம். இதற்கமைய எதிர்காலத்தில் சில கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

விசேட மாக சட்டமா அதிபரின் வழி காட்டலுக்கு அமைய நிதி தூய்தாக்கல் சட் டத்தின் கீழ் பல விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இடம் பெற்ற கொலைகள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத் துள்ளோம்.-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில், சஜித் இடையே விரைவில் நேரடி பேச்சு!

## 10 ஆம் திகதிக்குள் இறுதி முடிவு

கொழும்பு, ஜன. 29

**ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் வெகுவிரைவில் பேச்சு நடத்துவார்கள் எனவும், பெப்ரவரி 10 ஆம் திகதிக்குள் இணக்கத்துக்கு வராவிட்டால் தனிவழி செல்ல நேரிடும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணையலாம். அப்போது பிரச்னைகள் ஏற்படாது. இரு கட்சிகளிலும் தலைவர்கள் இருக்கலாம். இணக்கத்துடன் செயற்படக்கூடிய செயலாளரை நியமித்தால் பிரச்னை தீர்ந்துவிடும்.ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்தால் 40 இலட்சம் வரையான வாக்குகளைப் பெற முடியும். இரு தரப்பும் இணையாததால் கடந்த தேர்தல்களில் சுமார் 20 இலட் சம் வரையான வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை.

மொட்டு கட்சியின் வாக்குகள்தான் ஜே.வி.பி. வசம் சென்றுள்ளது.இரு தலைவர்களும் (சஜித், ரணில்) விரைவில் பேச்சு நடத்துவார்கள் -என்றார். (அ)

# செவிலியர்களாக இஸ்ரேல் செல்லும் இலங்கையர்கள்!

கொழும்பு, ஜன. 29

2025 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து இலங்கையைச் சேர்ந்த சுமார் 119 பேர் இஸ்ரேலுக்கு வீட்டு செவிலியர் பணிகளுக்குச் சென்றுள்ளனர். அதன்படி நாளை புதன்கிழமை இஸ்ரேலுக்கு பயணமாகவுள்ள 152 ஆவது குழுவைச் சேர்ந்த 29 பெண்கள் 5 ஆண்கள் என 34 செவிலியர் நிபுணர்களுக்கான விமான டிக்கெட்டுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வேலைவாய்ப்புப் பணியகத்தில் நடைபெற்றது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் இஸ்ரேலிய செவிலியர் நிறுவனம் இரண்டுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது வரையில் இலங்கையைச் சேர்ந்த 2009 செவிலியர்கள் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளனர்.

இதன்படி பார்க்கையில் இஸ்ரேல் செவிலியர் துறையில் இலங்கையர்களுக்கு தொழில் கிடைத்துள்ளது.

எனவே, இஸ்ரேல் செவிலியர் துறையில் தொழில் பெறுவதற்காக யாருக்கும் பணம் கொடுத்து ஏமாறுவதை தவிர்க்குமாறும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (அ)

# மகிந்தவுடன் பெரமுனவின் பிரதிநிதிகள் விசேட சந்திப்பு

கொழும்பு, ஜன. 29

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பொதுஜன பெரமுனவின் பிரதிகளுக்கும் இடையில் நேற்று முன் தினம் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு விஜேராம வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், சிலிண்டர் சின்னத்தில் கடந்த பொதுத்தேர்தலில் தேர்தலில் போட்டியிட்ட சிலரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, தற்போது மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான சதிகள் இடம்பெறுவதாகத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் மேலும் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக பிரேலால் ஜயசேகர கூறினார். (அ)

# மதுபோதையில் விபத்து ஏற்படுத்திய உப பொலிஸ் பரிசோதகர் மறியலில்!

கொழும்பு, ஜன. 29

கடமை நேரத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தி, விபத்தொன்றை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைதான கேகாலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கலிகமுவ, கொப்பேவல பகுதியில் ஏற்பட்ட குறித்த வாகன விபத்து தொடர்பாக கேகாலை தலைமையக பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டார். அவர் அலுவலக பணியாக அம்பேபுஸ்ஸ பகுதிக்கு பொலிஸ் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, எதிர்த் திசையிலிருந்து வந்த முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக் குள்ளானது.

விபத்தின் பின்னர் குறித்த பொலிஸ் வாகனம் நிறுத்தாமல் சென்றிருந்த நிலையில், சம்பவ இடத்திலிருந்தவர்கள் அந்த வாகனத்தைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்தனர். இந்த நிலையில், தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர் மது போதையிலிருந்ததாக தெரிய வந்துள்ளது. (அ)

# உள்ளூராட்சி தேர்தல் சட்டமூலத்துக்கு எதிரான மனு விசாரணைகள் நிறைவு

கொழும்பு, ஜன. 29

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என்று தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை நிறைவுறுத்தியுள்ள உயர் நீதிமன்றம், தனது இரகசிய தீர்ப்பை ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற சபாநாயகருக்கும் அனுப்புவதாக நேற்று முன் தினம் அறிவித்துள்ளது.

இரண்டு நாட்கள் நீடித்த வழக்கு விசாரணையை நிறைவுறுத்தி உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த மனுக்களை முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் உள்ளிட்ட நான்கு தரப்பினர் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உணவு நிலையங்களை மூடவேண்டிய நிலைமை!

## அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாட்டால்

கொழும்பு, ஜன. 29

சந்தையில் பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக உணவகங்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேங்காய், அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் பலவற்றுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எல்லா உணவுப் பொருட்களுக்கும் தேங்காய் பயன்படுத்தப்படுகிறது.

தேங்காயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

சில இடங்களில் அதிகூடிய விலைக்கு வாங்குவதற்குத் தேங்காய்கள் இல்லை.

எனவே இதற்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உணவக உரிமையாளர்கள் கோரியுள்ளனர். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்யவோ, குறைக்கவோமுடியாது

கொழும்பு, ஜன. 29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டதைப் போன்று அரசியலமைப்பின் 36 (2) உறுப்புரையின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதிய கொடுப்பனவுகளை இரத்துச் செய்யவோ அல்லது கொடுப்பனவு தொகையை குறைக்கவோ முடியாது. போலியான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி அரசியலமைப்பையும் அரசாங்கம் மீறியுள்ளது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ)

# அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட நாங்கள் ஒத்துழைப்போம்

## புத்திஜீவிகளுடனான சந்திப்பில் பிரிட்டன் தூதுவர்

கொழும்பு, ஜன. 29

இலங்கையில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதற்கான ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவதற்குத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாக இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக் தெரிவித்துள்ளார்.

தமிழ்பேசும் புத்திஜீவிகள் மற்றும் சட்ட வல்லுநர்களுக்கும் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக்குக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன், பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் மற்றும் விரிவுரையாளர் சுமதி சிவமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது குறிப்பாக தமிழ் மக்களின் அபிலாஷைகள் குறித்தும், அவர்கள் முகங்கொடுத்துவரும் முக்கிய அரசியல் பிரச்னைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக இலங்கையின் சமகால அரசியல் நிலைவரம், நாட்டில் நிலவிவரும் இனப் பிரச்சினைக்கான தீர்வு, அதனை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள், புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் மற்றும் அதில் உள்வாங்கப்படவேண்டிய விடயங்கள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயன்முறை என்பன உள்ளடங்கலாக தமிழ் மக்களின் நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் இச்சந்திப்பின்போது பரந்துபட்ட ரீதியில் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக், இலங்கையில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதற்கான ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவதற்குத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி வருமானத்தை 36 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க நடவடிக்கை

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 29

**புதிய அரசாங்கத்தின் "வளமான நாடு - அழகான வாழ்வு" கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக 2030 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 36 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சர்கள் சபையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் 16.1 பில்லியன் டொலர்களாக காணப்பட்ட ஏற்றுமதி வருமானத்தை இந்த ஆண்டு 18.2 பில்லியன் டொலர்களாக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கும் அதேநேரம், புதிய திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டில் வருமானத்தை 36 பில்லியன் டொலர்களாக உயர்த்திக் கொள்ள எதிர்பார்க்கப் படுகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய, உள்நாட்டு உற்பத்தியை பலப்படுத்தி ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகர வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் அமைவிடம், மனித வளங்கள் மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி நீண்ட கால கைத்தொழில் அபிவிருத்தி திட்டத்தை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப் பட்டது.

அதன் மூலம் வீழ்ச்சியடைந்த உள்நாட்டு உற்பத்தித் தொழில்துறைகளுக்கு புத்துயிர் அளித்தல், ஏற்றுமதித் தொழில் துறைகளில் போட்டித்தன்மை மிக்கதாக்குதல், சேவை தொழிற்துறையை ஊக்குவித்தல், புதிய கேள்விகள் மூலம் உலகச் சந்தையில் இடம்பிடித்தல், தேசியத் திட்டத்திற்கு அமைவாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை வரவழைத்தல், புதிய முதலீடுகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல், குறைந்த செலவு, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உள்ளீடுகள், விநியோகங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு உள்ளடக்கப்படும் வரியை மீளப் பெற்றுக்கொடுப்பதற்கான கட்டமைப்பை விமான நிலையத்தில் அமைக்க இதன்போது தீர்மானிக்கப் பட்டது.

ஏற்றுமதிப் பொருட்களைப் பரிசோதிக்கும் போது ஏற்படும் தாமதம் மற்றும் வினைத்திறன் இன்மையைத் தவிர்ப்பதற்காக, மனுவல் முறைக்குப் பதிலாக, சர்வதேச தரத்திற்கு அமைவான தானியக்க முறைமையை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுவ திட்டமிடப்பட்டது.

அதற்கான ஒதுக்கீடுகளை தொழிற்துறை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள இணக்கம் எட்டப்பட்டது. (அ)

# இலங்கை விமானப்படைக்கு புதிய தளபதியாக வாசு பந்து!



கொழும்பு, ஜன. 29

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் விமானப் படையின் புதிய தளபதியாக எயார்வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க நியமிக்கப் பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

அதன்படி விமானப்படையின் 20 ஆவது தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க வரலாற்றில் இணைந்துள்ளார்.

ஜனவரி 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதோடு தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, இன்றுடன் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

மேலும் வீர விக்கிரம விபூஷன, ரண விக்கிரம பதக்கம், ரணசூர பதக்கம் ஆகிய மூன்று விருதுகளையும் ரணசூர பதக்கத்தையும் எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெருந்தோட்டப்பகுதி மக்களுக்காக அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டம்!

கொழும்பு, ஜன. 29

பெருந்தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்காக எதிர்காலத்தில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு அமைப்பை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பெருந்தோட்டச் சமூகத்தினரின் வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, பெருந்தோட்ட மனித மேம்பாட்டு அறக்கட்டளையுடன் கடந்த 24 ஆம் திகதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மலையகப் பகுதிகளில் மண்சரிவு அபாயம் அதிகமாக இருப்பதால், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் நிலச்சரிவு ஏற்படாத தோட்ட நிலங்களை அடையாளம் கண்டு, அந்த நிலங்களில் அடுக்குமாடிக் கட்டடங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப் பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். விவசாயத்துக்கும் மட்டுமல் லாமல், வீட்டு வசதி கட்டுமா னத்துக்கும் மிகக் குறைந்த நிலம் மட்டுமே உள்ளதால், தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்னைக்குத் தீர்வாக இந்த அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

குழந்தைகளுக்கான முன்பள்ளிகள் முதல் கற்றல் மையங்கள், கூட்டுறவு மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுடன் கூடிய அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட இந்த அடுக்குமாடி குடியிருப்புத் திட்டம்திட்ட மிடப்பட்டுள்ளதாக அமைச்சர் சமந்த வித்யாரத்ன மேலும் கூறினார். (அ)

# பிரிட்டன் இந்து பசிபிக் பிராந்திய அமைச்சர் பிரதமருடன் சந்திப்பு!

கொழும்பு, ஜன. 29

பிரிட்டனின் இந்து பசிபிக் பிராந்தியத்திற்கான வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் நிர்வாக மேம்பாட்டு அலுவலக அமைச்சர் கத்தரின் வெஸ்ட் பிரதமர் கலாநிதி ஹரிணி அமசூரியவை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு நேற்று முன் தினம் பிரதமர் அலுவலகத்தில் வைத்து இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில், வறுமை ஒழிப்பு, பிராந்திய அபிவிருத்தி மற்றும் பொருளாதார சமநிலை ஆகியவை உள்ளடங்கலாக அரசாங்கத்தின் பிரதான முன்னுரிமை திட்டங்கள் பற்றிய விடயங்கள் கலந்துரையாடப் பட்டது.

இலங்கையின் டிஜிற்றல் மயமாக்கலுக்கான முயற்சிகள் மற்றும் "கிளீன் சிறீலங்கா" நிகழ்ச்சி திட்டம் பற்றிய



கருத்து பரிமாற்றமும் தேசிய முன்னேற்றத்திற்கான வழிநடத்தல்களின் போது சமூக பொறுப்புகள் மற்றும் அனைத்தும் உள்ளடங்களாக நிர்வாகம் செய்வதின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பிற்கு இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகாவத்த மற்றும் வெளிநாட்டு அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் தமித்ரி சங்கிகா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# கொள்கலன் விடுவிப்பில் காலதாமதம் இந்த வாரம் தீர்க்காவிடின் போராட்டம்

கொழும்பு, ஜன. 29

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்படும் காலதாமதத்தை இந்த வாரத்திற்குள் தீர்க்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கப்போவதாக கொள்கலன் ட்ரக் சாரதிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள, இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் கொள்கலன் வாகன சாரதிகளுக்கு கடும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

அடிப்படை சுகாதார வசதிகள் இன்மை உள்ளிட்ட பல்வேறு இன்னல்களைச் சாரதிகள் எதிர்கொள்வதாக தெரிவித்த அவர், இந்த காலதாமதத்தை இந்த வாரத்துக்குள் நிவர்த்தி செய்யாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப்படும் என எச்சரித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கையானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டையும் பாதிக்கும் என எச்சரித்த மஞ்சுள, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு இல்லாததால் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

சுங்கத்துறைக்கு கூடுதலாக, தொடர்புடைய பிற அரசு நிறுவனங்களும் 24 மணி நேரமும் வேலை செய்யவேண்டும் என்று கூறிய அவர், பிரச்னையைத் தீர்க்க பாதுகாப்புப் படையினரை சம்பந்தப்பட்ட பணிகளுக்கு அரசு ஈடுபடுத்த வேண்டும் என்றும் பரிந்துரைத்தார். (அ)

# உள்நாட்டு விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானம்!

கொழும்பு, ஜன. 29

உள்நாட்டு விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்போது கணிசமானளவு அதிகரித்து வரும் நிலையில், விமான நிலையங்களில் வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் இந்த கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 20 புதிய பதிவு கருமபீடங்களை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிரந்தரத் தீர்வை வழங்க முடியாது*

# பட்டதாரிகளின் கோரிக்கையை நிராகரித்தார் கிழக்கு ஆளுநர்!

திருகோணமலை, ஜன.29

**ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய பட்டதாரிகளின் கோரிக்கையை கிழக்கு ஆளுநர் நிராகரித்துள்ளார். அத்தோடு, வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைகள், சம்பந்தப்பட்ட துறை களுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ஆளுநர் கூறினார்.**



கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் 2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மாகாண ஆசிரியர் போட்டி பரீட்சைக்கு தோற்றி நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்த வேலையற்ற பட்டதாரிகள் குழுவினர் இடையே திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, பட்டதாரிகள் பல கோரிக்கைகளின் அடிப்படையில் தங்கள் பிரச்னைகளை முன்வைத்தனர்.

மேலும், அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று, இந்தப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்கால ஆட்சேர்ப்புக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

இத்தகைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நிரந்தரத் தீர்வை வழங்க முடியாது என்றும், அவர்களின் கோரிக்கை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ஆளுநர் கூறினார்.

இந்த நியமனங்களில் பல தரப்பினர் ஆர்வமாக இருப்பதால், அனைவருக்கும் நியாயமான முடிவு எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

மேலும், நேர்முகத் தேர்வை எதிர்கொண்டவர்களின் பிரச்னைகளை ஆராய்வதற்காக மாகாண கல்விச் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதால், பட்டதாரிகளின் பிரச்னைகளை அவர்க ளிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## தொழுநோய் விழிப்புணர்வு ஊர்வலம்



சாய்ந்தமருது, ஜன.29

சர்வதேச தொழு நோய் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனையில் தொழுநோய் விழிப்புணர்வு ஊர்வலமும் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி சனூஸ் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற ஊர்வலம், மருத்துவமனையில் இருந்து பிரதான வீதியூடாகச் சென்று, மாளிகைக்காடு, சாய்ந்தமருது போன்ற பிரதேங்களில் பிரதான வீதியூடாக வந்த வாகனங்களில் பயணித்த மக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள், ஸ்ரிக்கர் போன்றவையும் விநியோகிக்கப் பட்டன. (எ)

## மூதூர் பிரதேச சபை செயலராக ஜெம்சித்



செயலராக ஜெம்சித்

திருகோணமலை, ஜன.29

மூதூர் பிரதேச சபையின் புதிய செயலாளராக எம். ஐ. எம். ஜெம்சித் நேற்று முன்தினம் கடமைகளை ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். எம். சிராஜ், மூதூர் சுகா தார வைத்திய அதிகாரி ஹில்மி உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ)

## சுவாமி விபுலானந்தருக்கு மாமல்லபுர கருங்கல் சிலை



மட்டக்களப்பு, ஜன.29

முத்தமிழ் வித்தகர்சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் பூரண ஏற்பாட்டில், மட்டக்களப்பு கல்லடி பாலத்தில், இந்திய மாமல்ல புரத்தில் செதுக்கிய கருங்கல்லிலான சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நிறுவப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மட்டக்களப்பு கல்லடி உப் போடை இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி நீலமாத வானந்தஜீ முன் னிலையில் சுப வேளையில் அடிக்கல் நடும் நிகழ்வு நடை பெற்றது.(எ)

# காரைதீவு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

காரைதீவு, ஜன.29

அம்பாறை, காரைதீவு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களுக்கான ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம் பாவா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எஸ். உதுமாலெப்பை, அஷ்ரப் தாஹிர், க. கோடீஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.



அத்தோடு, காரைதீவு பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய சிறந்த திட்டங்களை மக்களின் தேவை கருதி உடன் நடைமுறைப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா, பிரதேச செயலாளருக்கும் உரிய திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினார். (எ)



நிந்தவூர் அல் பலாஹ் பாலர் பாடசாலையால் நடத்தப் பட்ட வருடாந்த விளையாட்டு போட்டியும் மாணவர் விடுகை விழாவும் நிந்தவூர் அல்-மதீனா வித்தியாலய மைதா னத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

## சர்வதேச யுசிமாஸ் போட்டியில் திருமலை மாணவன் சம்பியன்



திருகோணமலை, ஜன.29

இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச யுசிமாஸ் போட்டியில் திருகோணமலை மையத்தை பிரதிநிதித்துவப் படுத்தி பங்கேற்ற வேல்ஸ்குமார் ஷஸ்வின் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.


திருகோணமலை மையத்திலிருந்து 29 மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர். அவர்களில் 13 மாணவர்கள் வெற்றிக்கிண்ணங்களை பெற்றுள்ளனர். இப்போட்டியில் பல தரப் பட்ட நாடுகளை பிரதிநிதித்து வப்படுத்தி 5,000 இற்கும் மேட் பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றிருந்தனர்.(எ-04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவுக்குள் பலஸ்தீனியர்கள் நுழைய அனுமதி வழங்கிய இஸ்ரேல் இராணுவம்

காஸா, ஜன.29

**வடக்கு காஸாவுக்குள் பலஸ்தீனியர்கள் நுழைவதற்கு இஸ்ரேல் இராணுவம் அனுமதி வழங்கியது.**



பல்லாயிரக்கணக்கான மக்களை பலி வாங்கிய இஸ்ரேல் - ஹமாஸ் போர் 15 மாதங்களுக்குப் பிறகு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இருதரப்பும் ஏற்றுக்கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நிலையில், பணயக் கைதிகள் பரஸ்பரம் விடுதலை செய்யப்படுகின்றனர். அவ்வகையில், முதற்கட்டமாக 3 பெண் பணயக் கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்தது. இரண்டாவது கட்டமாக 4 இளம் இஸ்ரேல் பெண் பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. அவர்களுக்கு ஈடாக 200 பலஸ்தீனிய பணயக் கைதிகளை இஸ்ரேல் விடுவித்துள்ளது. ஒப்பந்தப்படி, பணயக் கைதிகளில் அர்பெல் யாஹூட் என்ற பெண்ணை ஹமாஸ் விடுவிக்கவில்லை.

ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறிவிட்டது என்றும், அர்பெல் யாஹூட் விடுதலை செய்யப்படும்வரை பலஸ்தீனியர்கள் வடக்கு காஸாவுக்கு திரும்ப அனுமதிக்கமாட்டோம் என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. இதனால் இடம்பெயர்ந்த சுமார் 6 இலட்சத்து 50 ஆயிரம் பலஸ்தீனிய மக்கள் வடக்கு காஸா பகுதிக்கு திரும்புவதற்கு காத்திருப்பதாக பலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பணயக் கைதி அர்பெல் யாஹூட் உயிருடன் இருப்பதாகவும், எதிர்வரும் சனிக்கிழமை அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் ஹமாஸ் தெரிவித்திருந்தது.

இதன்பின்னர் நேற்று முன்தினம் இரவு நடந்த பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்பட்டுள்ளது. இதன்படி இரண்டு கட்டமாக அர்பெல் யாஹூட் உட்பட 6 பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுதலை செய்ய முடிவு எட்டப்பட்டது. எனவே, வடக்கு காஸாவுக்குள் பலஸ்தீனியர்கள் நுழைய இஸ்ரேல் அனுமதி வழங்கியது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 7 மணியளவில், பலஸ்தீனியர்கள் நெட்சாரிம் பாதை வழியாக வடக்கு காஸாவுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர். (எ)

## திபெத்தில் நிலநடுக்கம்

பீஜிங், ஜன.29

திபெத்தில் 4. 5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக திபெத் உள்ளது. இமயமலையின் வடக்கு பகுதியில் உயரமான இடத்தில் திபெத் அமைந்துள்ளது. திபெத்தில் கடந்த 7ஆம் திகதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நாட்டின் ஷிகாட்சே நகரை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் 120இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், திபெத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 03.03 மணியளவில் நிலநடுக்கம் பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

5 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.(எ)

## எரிவாயு ஏற்றிச்சென்ற பௌசர் வெடித்து விபத்து

**பாகிஸ்தானில் 6 பேர் பலி**



லாகூர், ஜன.29

எரிவாயு ஏற்றிச்சென்ற பௌசர் வெடித்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான், பஞ்சாப் மாகாணம் முல்தான் மாவட்டம் ஹமித் புர் கனொரா பகுதியில் நேற்றுக் காலை எரிவாயு ஏற்றிக்கொண்டு பௌசர் சென்றுகொண்டிருந்தது.

தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதி அருகே சென்ற போது எதிர்பாராத விதமாக பௌசர் வெடித்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

மேலும், 31 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மேலும், இந் தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

## குடியேறிகள் விவகாரத்தில் அடிபணிந்தது கொலம்பியா

வாஷிங்டன், ஜன.29

சட்டவிரோத குடியேறிகள் விவகாரத்தில் ட்ரம்ப் காட்டிய அதிரடியால் கொலம்பிய அரசு அடிபணிந்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த 20 ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றார். அவர் பதவியேற்றவுடன் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்கே அனுப்ப உத்தரவிட்டார். இந்த உத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்தது. முதற்கட்டமாக அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 500இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு அவர்களை நாடு கடத்தும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த கவுதமாலா நாட்டைசேர்ந்தவர்களில் 160 பேர் இராணுவ விமானங்கள் மூலம் கவுதமாலாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை கவுதமாலா அரசு ஏற்றுக்கொண்டது. அதேவேளை, மெக்சிக்கோவைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளை அமெரிக்கா விமானம் மூலம் அனுப்பி வைத்தது. ஆனால், அவர்களை ஏற்றுக்கொள்ள மெக்சிக்கோ அரசு மறுத்துவிட்டது.

இதனிடையே, கொலம்பியா நாட்டை சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளில் 50இற்கும் மேற்பட்டோரை கைது செய்த அமெரிக்கா அவர்களை சொந்த நாட்டிற்கு விமானம் மூலம் திருப்பியனுப்பியது. ஆனால், தங்கள் நாட்டை சேர்ந்தவர்களை ஏற்றுக்கொள்ள கொலம்பியா அரசு மறுத்துவிட்டது.

இதனால், ஆத்திரமடைந்த ட்ரம்ப், கொலம்பியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 25 சதவீதம் வரி விதித்தார்.

இந்த வரி விதிப்பு உடனடியாக அமுலுக்கு வந்தது. மேலும், இன்னும் ஒருவாரத்தில் இந்த வரி 50 சதவீதமாக உயர்த்தப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலடியாக, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பதாக கொலம்பியா ஜனாதிபதி குஸ்டவ் பெட்ரோ தெரிவித்தார்.

இதனால், இரு நாடுகளுக்கும் இடையே வரி ரீதியில் மோதல் வெடித்தது. அதே வேளை, கொலம்பி யாவின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியினருக்கு வீசா கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. வர்த்தக கட்டுப்பாடு உட்பட பல்வேறு நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டது.

இந்த நிலையில், ட்ரம்ப்பின் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளால் அதிர்ச்சியடைந்த கொலம்பியா தற்போது அடிபணிந்துள்ளது. இதன்படி, தங்கள் நாட்டை சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளை ஏற்றுக்கொள்வதாக கொலம்பியா தெரிவித்துள்ளது.

இதன் மூலம் அமெரிக்காவில் வசித்து வரும் கொலம்பியாவை சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளை அவர்களின் நாட்டுக்கே திரும் பியனுப்பும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதையடுத்து, கொலம்பியா மீது விதிக்கப்பட்ட 25 சதவீத கூடுதல் வரியை அமெரிக்கா நிறுத்தி வைத் துள்ளது. (எ)

## ஜோர்தானும் எகிப்தும் அதிகளவில் காஸா மக்களை ஏற்க வேண்டும்

**ட்ரம்ப் வேண்டுகோள் - இனச்சுத்திகரிப்பு முயற்சியென அச்சம்**

வாஷிங்டன், ஜன.29


ஜோர்தானும் எகிப்தும் மேலும் அதிகளவில் காஸா மக்களை உள்வாங்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனால், காஸாவில் இனச்சுத்திகரிப்பு குறித்து அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுடன் இது குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் எகிப்து ஜனாதிபதியுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளப்போவதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"காஸா பள்ளத்தாக்கு முழுவதையும் நான் பார்க்கின்றேன். அது பெரும் குழப்பத்தில் உள்ளது.

காஸாவில் வசிப்பவர்களை தற்காலிகமாக அல்லது நீண்டகாலத்துக்கு அப்புறப்படுத்தி வெளியேற்ற முடியும்.

காஸா தற்போது முற்றாக இடிக்கப்பட்ட ஒருபகுதியாக காணப்படுகின்றது. கிட்டத்தட்ட அனைத்தும் இடிக்கப்பட்டு மக்கள் அங்கே இறந்து கொண்டிருக்கின்றனர். அரேபிய நாடுகளுடன் இணைந்து வெவ்வேறு பகுதிகளில் அவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு நான் முயற்சிப்பேன்" என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (எ)



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நாடு கடத்தும் உத்தரவை தொடர்ந்து கைகளில் விலங்கிடப்பட்டவர்கள் அமெரிக்காவின் இராணுவ விமானங்களில் ஏற்றப்படுவதை காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூனியர் மகளிர் உலகக் கிண்ணம் அரையிறுதியில் இங்கிலாந்து அணி

கோலாலம்பூர், ஜன.29

இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவைத் தொடர்ந்து இங்கிலாந்து அணியும் அரையிறுதிக்கு முன்னேறியது.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றுவரும் ஐ. சி. சி. 19 வயதுக்குட்பட்ட மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் சுப்பர் 6 சுற்றில் இரண்டாம் குழுவிலிருந்து முதலாவது அணியாக தென்னாபிரிக்கா அரையிறுதிக்கு முன்னேறியது.

அதனைத் தொடர்ந்து இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் அரையிறுதிச் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாம் குழுவுக்கான ஒரே ஒரு சுப்பர் 6 போட்டியில் நியூசிலாந்தை வீழ்த்திய இங்கிலாந்து நான்காவது அணியாக அரையிறுதியில் விளையாடத் தகுதி பெற்றது.

சரவாக், போர்னியோ கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டியில் நியூசிலாந்தை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து மகளிர் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்



களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் டில்லி கோர்ட்டீன் கோல்மன் 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ப்ரிஷா தனவாலா 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ட்ருடி ஜொன்சன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மகளிர் அணி 11. 4 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (எ)

## சிறந்த வீராங்கனையாக ஸ்மிருதி மந்தனா தெரிவு

டுபாய், ஜன.29

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி யில் 2024ஆம் ஆண்டின் சிறந்த வீராங்கனையாக இந்திய அணியின் ஸ்மிருதி மந்தனா தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர்,



கடந்த ஆண்டில் 13 போட்டிகளில் 747 ஓட்டங்கள் குவித்திருந்தார். இந்த நிலையில், ஐ. சி. சியால் ஸ்மிருதி மந்தனா 2024ஆம் ஆண்டின் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ)

## அமேலியா கேர் வருடத்தின் அதிசிறந்த வீராங்கனை




டுபாய்,ஜன.29

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் கடந்த வருடம் நடைபெற்ற மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இறுதி ஆட்ட நாயகியாகவும் தொடர் நாயகியாகவும் தெரிவு செய்யப்பட்ட நியூசிலாந்தின் அமேலியா கேர், 2024ஆம் ஆண்டுக்கான அதிசிறந்த ஐ. சி.சி. ரி - 20 கிரிக்கெட் வீராங்கனையானார்.

இந்த விருதை வென்றெடுத்த இரண்டாவது நியூசிலாந்து வீராங்கனை அமேலியா கேர் ஆவார். 9 வருடங்களுக்கு முன்னர் இந்த விருதை சுசி பேட்ஸ் வென்றிருந்தார்.2024 மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத் தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றில் நியூசிலாந்து வெற்றிபெறுவதில் மிக முக்கிய பங்காற்றியிருந்தவர் அமேலியா கேர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் 43 ஓட்டங்களைப் பெற்ற அமேலியா கேர், பந்துவீச்சில் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றி நியூசிலாந்தை உலக சம்பியனாக்கியிருந்தார்.

மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத்தில் 6 போட்டிகளில் 135 ஓட்டங்களைப் பெற்ற அமேலியா கேர், 15 விக்கெட்களைக் கைப்பற்றியிருந்தார்.

இதேவேளை, கடந்த வருடம் 18 சர்வதேச ரி - 20 போட்டிகளில் விளையாடிய அமேலியா கேர், 24.18 என்ற சராசரியுடன் 387 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் 29 விக்கெட்களை வீழ்த்தி சகலதுறைகளிலும் திறமையை வெளிப்படுத்தியிருந்தார். (எ)

## சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரராக பும்ரா தெரிவு



டுபாய்,ஜன.29

2024ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரராக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவை ஐ. சி. சி. தெரிவு செய்துள்ளது.

பும்ரா, கடந்த ஆண்டில் 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 71 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார். தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவில் பும்ரா கடந்த ஆண்டு விளையாடியிருந்தார். இதில் அவுஸ்திரேலிய தொடரில் மட்டும் 32 விக்கெட்களை பும்ரா கைப்பற்றியிருந்தார். இது தவிர கடந்த ஆண்டில் 8 ரி - 20 போட்டிகளில் விளையாடி 15 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். (எ)

## டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியல் பாகிஸ்தானுக்கு கடைசி இடம்

டுபாய், ஜன.29

டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் பாகிஸ்தான் அணி கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் - மேற்கு இந்திய தீவுகள் அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதில் மேற்கு இந்திய தீவுகள் அணி 120 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டி முடிவடைந்ததையடுத்து சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன்படி தென்னாபிரிக்கா (69.44 சதவீதம்) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியா (63.73 சதவீதம்) 2ஆம் இடத்திலும், இந்தியா (50.00 சதவீதம்) 3ஆம் இடத்திலும், நியூசிலாந்து (48.21 சதவீதம்)4 ஆம் இடத்திலும், இலங்கை (45.45 சதவீதம்) 5ஆம் இடத்திலும் உள்ளன.

மேலும், இங்கிலாந்து (43.18 சதவீதம்) 6ஆவது இடத்திலும், பங்களாதேஷ் (31.25 சதவீதம்) 7ஆவது இடத்திலும் உள்ளன.

பாகிஸ்தானுக்கு எதிராக வெற்றி பெற்ற மேற்கு இந்திய தீவுகள் அணி (28.21 சதவீதம்) சில புள்ளிகள் கூடுதலாக பெற்ற நிலையில் 8ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

தோல்வி கண்ட பாகிஸ்தான் (27.98 சதவீதம்) சில புள்ளிகளை இழந்த நிலையில் கடைசி இடத்துக்கு (9ஆவது இடம்) தள்ளப்பட்டுள்ளது. (எ)

## கமிந்து மெண்டிஸுக்கு ஐ. சி. சி. விருது வழங்கல்

துபாய், ஜன.29

2024ஆம் ஆண்டின் ஐ. சி. சி. வளர்ந்து வரும் வீரர் விருதை இலங்கை அணி வீரர் கமிந்து மெண்டிஸ் வென்றுள்ளார்.

2024ஆம் ஆண்டின் வளர்ந்து வரும் வீரர், வீராங்கனை விருது வென்றவர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட், ஒருநாள், ரி - 20 அணிகள் மற்றும் சிறந்த வீரர், வீராங்கனைகளை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது. ஆண்டு முழுவதும் வீரர், வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்ட விதத்தை கணக்கில் கொண்டு இந்த கௌரவத்துக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள்.

அந்த வகையில், 2024ஆம் ஆண்டிற்கான வளர்ந்து வரும் வீரர் விருதுக்கு 4 வீரர்களின் பெயர்களை ஐ. சி. சி. பரிந்துரைத்திருந்தது.

இதன்படி, இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் கஸ் அட்கின்சன், இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் கமிந்து மெண்டிஸ், பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் சைம் அயூப் மற்றும் மேற்கு இந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷமர் ஜோசப் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.இதில், 2024ஆம் ஆண்டின் வளர்ந்து வரும் வீரர் விருதை இலங்கை வீரர் கமிந்து மெண்டிஸ் வென்றுள்ளார்.


அதேபோன்று, வளர்ந்து வரும் வீராங்கனை விருத்துக்கான பரிந்துரை பட்டியலில் இந்தியாவை சேர்ந்த ஷ்ரேயங்கா பாட்டீல், அயர்லாந்து வீராங்கனை பிரேயா சார்ஜென்ட், ஸ்கொட்லாந்தின் சஸ்கியா ஹார்லி மற்றும் தென்னாபிரிக்காவை சேர்ந்த அன்னெரி டெர்க்சன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களில் 2024ஆம் ஆண்டின் வளர்ந்து வரும் வீராங்கனை விருதுக்கு அன்னெரி டெர்க்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ)




## 34 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தானில் வெற்றி

### மே. இ. தீவுகள் அசத்தல்



முல்தான்,ஜன.29

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி அபார வெற்றி பெற்று 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை 1 - 1 என்று சமன் செய்தது. இந்த வெற்றி அந்த அணிக்கு 34 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானில் கிடைத்த முதல் வெற்றியாகும்.

முல்தானில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அந்த அணி 163 ஓட்டங்களுக்குச் சுருண்டு போக பாகிஸ்தான் அணி வெறும் 154 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. 2ஆவது இன்னிங்ஸில் மே.இ.தீவுகள் 244 ஓட்டங்கள் எடுக்க வெற்றி இலக்கான 254 ஓட்டங்களை எதிர்த்து விளையாடிய பாகிஸ்தான் 133 ஓட்டங்களுக்குச் சுருண்டு படுதோல்வி கண்டது. இரண்டரை நாட்களில் இந்த டெஸ்ட் போட்டி முடிந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

பின்னியிடம் வடக்கு ஆளுநர் தெரிவித்தார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடு தொடர்பாகவும் அதன் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் விரிவாக ஆளுநர் விளக்கமளித்தார். கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான உள்ளூர் விமான சேவைகளை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்துவது தொடர்பிலும், நியூஸிலாந்துத் தூதுவருக்குத் தெரியப்படுத்தினார்.

அத்துடன் வடக்கில் அதிகரித்துள்ள உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனை மற்றும் அதனது தாக்கங்கள், வடக்கு மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டியதன் அவசியம், மீள்குடியேற்றம், உட்கட்டுமான அபிவிருத்தி தொடர்பிலும் ஆளுநர், தூதுக் குழுவினருக்கு எடுத்துரைத்தார். (அ-5)

## உள்ளூராட்சி...

வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஏற்கனவே சபாநாயகருக்கு கிடைத்துள்ளது. அது விரைவில் சபையில் அறிவிக்கப்படும். மேலும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## புதிய...

கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் விருந்தினர் விடுதி ஒன்றில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஒற்றையாட்சி சித்தாந்தம் கொண்ட புதிய அரசமைப்பை தமிழ் மக்களின் ஆதரவுடன் நிறைவேற்ற தற்போதைய அரசாங்கம் முயல்கிறது. இது பாராளுமன்றில் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் பலம் தமிழர் தரப்பிடம் கிடையாது இது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்போது தமிழர்கள் ஆதரித்தால் இந்த நாட்டில் எமது மக்களுக்கு எதிர்காலம் கிடையாது.

தமிழரின் ஆதரவுடன் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் நான் அரசியலிலிருந்து விலகிவிடுவேன். ஏனெனில் அதன் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை நாம் மேற்கொள்வது அர்த்தமற்றது. - என்றார். (அ)

## யோஷிதவுக்கு...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குறித்த வழக்கில் யோஷித ராஜபக்ஷ இதுவரை சந்தேக நபராகப் பெயரிடப்படவில்லை. யோஷித ராஜபக்ஷ தொடர்புபட்டுள்ள குறித்த பணமோசடி சம்பவம் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது.

இதுவரை, யோஷித இந்த வழக்கில் சந்தேக நபராகப் பெயரிடப்படவில்லை. உயர் நீதிமன்றத்தில் ஒரு நபருக்கு குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு, சந்தேக நபராக அவரிடமிருந்து வாக்குமூலம் பெறுவது அவசியம்.

வாக்குமூலம் பெறுவதற்காக இந்த நபரை சந்தேக நபராக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதுதான் வழக்கமான நடைமுறை. பிணை சட்டத்தின் விதிகளின்படி, அவர் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்காவிட்டால், அல்லது நாட்டை விட்டு தப்பிச் செல்லாவிட்டால் பிணை வழங்குவது இயல்பானது. பிணை வழங்கப்படுவதால் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவார் என்று அர்த்தமல்ல - என்றார். (அ)

## யாழ்...

இதனைக் குறிப்பிட்டார்.

அதேபோன்று தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்வதானால், தொழிற்சங்க நடவடிக்கைக்கு முன்னர் அமைச்சுடன் பேச்சு நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். பேச்சுவார்த்தையின் பின்னர் அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## ஜனாதிபதி...

தடவைகள் கோரிக்கை முன்வைத்திருந்தும் அவரும் எம்மை கண்டு கொள்ளாதவராகவே இருந்து வருகின்றார்.

இந்நிலையில் வேலையற்ற பட்டதாரிகள் ஆகிய நாம் இன்று முதல் 31ஆம் திகதியன்றுவரை எமது பிரச்னைகளை வெளிக்கொணரும் வகையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

குறிப்பாக எமது மூன்று நாள் போராட்டம் இன்று பசுமைத் தானம் என்னும் தொனிப்பொருளில் மரக்கன்று விநியோகித்தலுடன் யாழ்.வீரசிங்கம் மண்டபம் முன்றலில் ஆரம்பிக்கப்படுவதுடன், 30 ஆம் திகதியன்று கலைத்தூது கலையரங்கில் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

31 ஆம் திகதியன்று ஜனாதிபதியின் யாழ்.வருகையை முன்னிட்டு மாவட்ட செயலகம் முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு எமது நிலையை எடுத்துக் கூறும் வகையில் கவனவீர்ப்புப் போரட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்-என்றார். (அ-05)

## இலங்கை...

கைது செய்யப்பட்டனர்.

கைது நடவடிக்கையின்போது, கடற்படையின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இரண்டு இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இரண்டு மீனவர்களுக்கு காயம் என்பதனால் ஏனைய மீனவர்கள் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்ற யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி, வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியுடன் கலந்துரையாடிய பின்னர், மீனவர்களைப் பார்வையிட்டார்.

இதேவேளை, காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் இருவரையும், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், நேரில் சென்று பார்வையிட்டனர்.

கருணைநாதன் இளங்குமரன் மற்றும் ஜெயானந்தமூர்த்தி றஜீவன் ஆகியோர், தனித்தனியாக வைத்தியசாலைக்குச் சென்று மீனவர்களை பார்வையிட்டனர்

## மாவை...

போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சி.ரி. ஸ்கான் பரிசோதனை மூலம் அவரது தலையில் கணிசமான அளவில் இரத்தப் பெருக்கு இருப்பதை வைத்திய நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவினால் ஆபத்தான நிலையில் உள்ள அவருக்கு, தற்போது நிபுணர்களின் கண்காணிப்பில் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக யாழ் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் மாவை சேனாதிராசா வீட்டு குளியலறைக்குச் செல்லும் போது கீழே விழுந்துள்ளார். இதையடுத்து அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். (அ)

துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில்

# ‘டாட்டூ’ நிலையம் பிரதேச சபையால் சீல் வைக்கப்பட்டது



யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்ப்பாணம் - வடமராட்சி நெல்லியடி நகரில் உள்ள டாட்டூ குத்தும் நிலைமொன்றில் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வந்த நிலையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் குறித்த நிறுவனம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

## புதிய அரசமைப்பை ஆதரித்தால்...

தரப்புக்கு கிடையாது. எனவே புதிய அரசமைப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அதனை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும்.

ஒற்றையாட்சி சித்தாந்தம் கொண்ட புதிய அரசமைப்பு தமிழரின் ஆதரவுடன் நிறைவேறினால் நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிர்காலம் இல்லை. இவ்வாறு எச்சரித்துள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.

வடக்கு மாகாணத்தில் ஊடகவியலாளர்களுடனான இந்தச் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தவை வருமாறு -

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைப் பிடித்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பல சவால்கள் உள்ளன. இந்த சவால்க ளுக்கு தீர்வு காணும் நிலைமை அண்மை யில் இல்லை. எனவே இந்த சவால்களை மறைக்கும் விதமாக ஒற்றையாட்சி தன்மை கொண்ட புதிய அரசமைப்பை - குறிப்பாக தமிழர்களின் ஆதரவுடன் நிறைவேற்றும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

2015 முதல் 2019 வரையான காலத்தில் நல்லாட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பை நிறைவேற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்கிறது. ‘ஏக்கிய இராஜ்ஜிய’ வில் சமஷ்டி இருப்பதாகக் கூறிக்கொண்டுவரப்பட்ட அந்த ஒற்றையாட்சி அரசமைப்பு தமிழினத்துக்கு ஆபத்தானது. இந்தபுதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றிருந்தது. தற்போது ‘ஏக்கிய இராஜ்ஜிய’ நிலைப்பாட்டை தாம் கைவிட்டுவிட்டதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றில் 159 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள அரசாங்கம் புதிய அரசமைப்பை இலகுவாக நிறைவேற்ற முடியும். தமிழ் பிரதிநிதித்துவத்தால் இதனைத் தடுக்க முடியாது. வடக்கு, கிழக்கு தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் 19 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் புதிய அரசமைப்புக்கு ஆதரவளிக்கக் கூடாது . எனவே தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 19 பாராளுமன்ற உறுப்பினர்களும் புதிய அரசைமைப்பை எதிர்க்கவேண்டும்.

இதற்கான முதல் கட்ட முயற்சிகளை நாம் ஆரம்பித்துள்ளோம்.

இதேநேரத்தில் புதிய அரசமைப்பின் நடைமுறையாக்கம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்போது தமிழ் மக்கள் எதிர்த்து வாக்களிக்க வேண்டும். ஏனெனில் தமிழர்களின் ஆதரவுடன் ஒற்றையாட்சி அரசமைப்பை நிறைவேற்றவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு.

எனெனில் தமிழர்களின் ஆதரவுடன் ஒற்றையாட்சி சித்தாந்தம் கொண்ட அரசமைப்பை நிறைவேற்றிவிட்டால் இங்கு இனப்பிரச்னை இல்லை என்பதை சர்வதேசம் ஏற்றுவிடும் இதன்பின்னர் தமிழ் மக்களுக்கான எதிர்காலம் இல்லை - தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கவும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான 76 ஆண்டுகளில் தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை எதிர்த்தே வந்துள்ளனர். நடைமுறையில் உள்ள அரசமைப்பு உட்பட அனைத்து ஒன்றையாட்சி அரசமைப்புகளையும் தமிழ் மக்கள் நிராகரித்துள்ளனர்.

எனவே புதிய ஒற்றையாட்சி அரசமைப்பையும் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் என்று காட்டியும் புதிய அரசமைப்புக்கான ஆணையை அரசாங்கம் கோரலாம். அதை காரணமாக வைத்து தமிழ் மக்கள் புதிய அரசமைப்பை ஆதரித்து விடக் கூடாது. எந்த வகையிலும் ஒற்றையாட்சி தத்துவத்தைக் கொண்ட அரசமைப்பை நாம் ஏற்றுவிடலாகாது. இதனை செய்தால் தமிழினத்துக்கு எதிர்காலம் என்பதே இல்லை - என்றார்.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் க. சுகாஸ், சட்ட ஆலோசகர் காண்டீபன் ஆகியோரும் பங்கேற்றனர். (அ)

## மாவை குணமடைய...

மனதார பிரார்த்திக்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது ருவிட்டரில் பதிவிட்டுள் ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வீட்டில் தவறி விழுந்த நிலையில் தலையில் நரம்பு வெடிப்பு ஏற்பட்டதால் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக நேற்று செவ்வாய்க் கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

## இலங்கை - இந்திய...

இந்த மீனவர் பிரச்சனையானது நீண்ட காலமாக நீடிக்கும் ஒரு பிரச்னையாகும். இராஜதந்திர ரீதியாக நாம் பல கட்டமாக இந்த விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த 2 மாதங்களில்,கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இந்தப் பிரச்னையை தீர்க்க நாம் அனைத்து வழிகளிலும் முயற்சிகளை மேற் கொண்டுதான் வருகிறோம். ஏனெனில், இதனால் வடக்கு மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளார்கள்.

ஆனால்,இதனை இராஜதந்திரப் பிரச்னையாக மட்டும் கருத முடியாது. எமது மீனவர்களும், இந்திய மீனவர்களும் எமது கடற்பரப்பில், தங்களின் தொழிலுக்காக முரண்படும் போக்கே இங்கு காணப்படுகிறது. எவ்வாறாயினும், எமது கடலையும் எமது மீனவர்களையும் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கான பேச்சுக்களிலும் நாம் தொடர்ச்சியாக ஈடுபடுவோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# உரிய வேலைத்திட்டம் இன்மையால் அடக்குமுறையை ஆரம்பித்த அரசு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 29

**அரசாங்கத்திடம் உரிய வேலைத்திட்டம் இன்மையினால் அடக்குமுறையை ஆரம்பித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற ஒருங்கிணைப்பு காரியாலய திறப்பு விழா நேற்று நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையத்தில் இடம்பெற்றது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலேயே இந்த காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ -

நாம் அரசியல் செய்கின்றோம். ஆகவே எமக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் கிடையாது.

ஆனால் சில கட்சிகள் அடக்கு முறைகளின் ஊடாக தமது அரசியலை கொண்டு நடத்த முடியும் என எண்ணுகின்றனர்.

நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டமும் அவர்களிடத்தில் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. நாட்டின் பிரச்னைகளை தீர்க்க காலம் போதுமான தாக இல்லை என கூறுகின்றனர்.

ஆனால் அரசாங்கத்திடம் உரிய வேலைத்திட்டம் இன்மையினால் அடக்குமுறையை ஆரம்பித்துள்ளது- என்றார். (அ)

## மனுஷவை கைது செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை!

கொழும்பு, ஜன. 29

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதாகக் கூறி திசர நாணயக்கார மூலம் பணம் வசூலித்த சம்பவம் தொடர்பில் மனுஷ நாணயக்காரவை கைது செய்ய போதுமான ஆதாரங்கள் இல்லாததால், இந்த விடயத்தில் அவரைக் கைது செய்ய எதிர்ப்பார்க்கவில்லை என நிதிக் குற்றப் பிரிவு சார்பில் முன்னிலையான குற்றப் புலனாய்வுத் துறை பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அதன்படி, இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு முன்னாள் அமைச்சர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி, சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பார் என்று மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

நிலுவையில் உள்ள பிணை மனுவை பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி விசாரிப்பதற்காக திகதி கம்பஹா நீதவான் மூலம் நிர்ணயிக்கப்பட்டது.

மனுதாரர் மனுஷ நாணயக்கார சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்திரதிஸ்ஸ தலைமையிலான சட்டத்தரணிகள் குழு ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சிவப்பு அரிசியில் பச்சை அரிசியை கலந்து விற்பனை செய்யும் மோசடி!

கொழும்பு, ஜன. 29

சிவப்பு அரிசியில் பச்சை அரிசியைக் கலந்து விற்பனை செய்யும் மோசடி குறித்து தகவல் கிடைத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் சிவப்பரிசி பற்றாக்குறை காரணமாக சில வர்த்தகர்கள் இந்த மோசடியை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதன்படி, இது தொடர்பாக சோதனைகளை நடத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

இதற்கிடையில், கடந்த சில நாட்களில், கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்தமை தொடர்பில் 140 இற்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புக்கள் நுகர்வோர் விவகார அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## 77 ஆவது சுதந்திர தின ஒத்திகை நிகழ்வு இன்று

கொழும்பு, ஜன. 29

நாட்டின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கான ஒத்திகை நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கான ஒத்திகை நிகழ்வுகள் நாளை ஆரம்பமாகவுள்ளது.

அதற்கமைய நாளை காலை 8.00 மணியிலிருந்து இந்த ஒத்திகை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தேசிய மறுமலர்சிக்காய் ஒன்றிணைவோம் என்னும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது. இதற்காக இராணவ கடற்படை விமானப்படை பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை சிவில் பாதுகாப்பு அணிவகுப்புக்களை நடத்த தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த அணிவகுப்பு நிகழ்வுகள் நாளையிலிருந்து எதிர்வரும் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. குறித்த அணிவகுப்பு ஒத்திகை இடம்பெறும் காலப்பகுதியில் வாகனப் போக்குவரத்துக்கு கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது. அதற்கமைய கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் விசேட போக்குவரத்து நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று குறித்த பகுதியின் பாதுகாப்பும் பலப்படுத்தப்படவுள்ளது - என்றார். (அ)

## அரசித் தட்டுப்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 29

நாட்டில் நிலவும் அரசித் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அரசிக்கான கேள்விக்கு அமைய இறக்குமதிக்கு அனுமதி வழங்கினோம். அதனப்படிடையில் அரசி விநியோக நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இப்போதும் சிவப்பு பச்சை அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். குறுகிய கால மற்றும் நீண்டகால திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேபோன்று தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன - என்றார். (அ)

## அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த பல்பொருள் அங்காடிக்கு எதிராக அபராதம்!

கொழும்பு, ஜன. 29

உள்நாட்டு வெள்ளைப் பச்சையரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கிரிபத்கொட பிரதேசத்தில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்க நேற்று முன்தினம் மஹர நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்தது.

குறித்த பல்பொருள் அங்காடியில் உள்நாட்டு வெள்ளைப் பச்சையரிசி கிலோ ஒன்று 255 ரூபாய்க்கு விற்பனை செய்தமை தொடர்பில் கம்பஹா மாவட்ட நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் மஹர நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய உண்மைகளின்படி, இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த தினங்களில் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிரான வழக்குகளுக்காக நீதிமன்றம் 3 மில்லியனுக்கும் அதிகமான தொகையை அபராதமாக விதித்துள்ளதாக அதிகார சபை கூறுகின்றது.

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமை தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை அண்மைய தினங்களில் 140 சுற்றிவளைப்புகளுக்கு மேல் மேற்கொண்டுள்ளதாகவும் எதிர்வரும் நாள்களிலும் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அரசாங்கத்துக்குச் சொந்தமான கைவிடப்பட்ட வாகனங்கள் மீட்பு!

கொழும்பு, ஜன. 29

அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகக் கூறப்படும் கைவிடப்பட்ட வாகனங்கள் சில கொழும்பு 7 சாவஸ்தி மாளிகைக்குச் சொந்தமான காணியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தின் அதிகாரிகள் சிலர் அந்த கட்டடத் தொகுதியைப் பரிசோதனைக்கு உட்படுத்திய போதே இந்த வாகனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த கட்டடத்தை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கும் நோக்கிலேயே பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கிருந்த சில வாகனங்கள் சேதமடைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு விரைவில் பதவி உயர்வுகள்

### ஒய்வூதிய பிரச்னைக்கும் தீர்வு

கொழும்பு, ஜன. 29

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் பதவி உயர்வு முறை ஏற்படுத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

கிராமப்புற அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே இதனைத் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சமூக வலுவூட்டலுக்கான தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றபோது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்படி, அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பதவி உயர்வு வழங்குவதற்குத் தேவையான தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குள் நடத்தப்படும்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒய்வூதிய பிரச்னையை சில வாரங்களுக்குள் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

## சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட ரூ.20 கோடிக்கும் அதிகமான பொருட்கள் சிக்கின!

கொழும்பு, ஜன. 29

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட இரண்டு கொள்கலன்களிலிருந்து 20 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான பொருள்கள் சுங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

பொறுப்பேற்கப்பட்ட பொருள்களில் வாசனைத் திரவியங்கள், பாதணிகள், சொக்லேட் உள்ளிட்ட பல பொருட்கள் அடங்கியுள்ளன.

டுபாய் மற்றும் மலேசிய ஆகிய நாடுகளிலிருந்து குறித்த கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள முகவரிகளுக்குக் குறித்த பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அந்த முகவரிகள் அனைத்தும் போலியானவை என முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.